# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 157/2019 தேதி- 26.03.2026
(DW.1) – ஜோஸ்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1.வாதிக்கு மொத்தம் எவ்வளவு சென்ட் சொத்து உரிமைப்பட்டது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் உள்ள சங்கதிகளை அனைத்து எனக்கு தெரியும் என்றாலும், வழக்கறிஞரிடம் நான் தான் சொல்லிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள இரண்டு மாடி கட்டிடம் உள்ள வீடு என்னுடைய வீடு என்றால் சரிதான். மேற்சொன்ன புகைப்படத்தில் உள்ள வீடு கட்டி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 9 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட வீடாகும்.

2. மேற்சொன்ன வீட்டில் குடியேறி எவ்வளவு ஆண்டுகள் ஆகுமென்றால் எட்டு ஆண்டுகள் ஆகும். அதற்கு முன்பாக ஓலை குடிசை தான் இருந்தது என்றால் பாதி ஓலை குடிசையும், பாதி செங்கல் கட்டிடமாக இருந்தது. மேற்சொன்ன புகைப்படம் வா.சா.ஆ.7 ஆகும். தற்போது என்னிடத்தில் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7 ஆவணமான புகைப்படத்தில் உள்ள என்னுடைய வீட்டிற்கு வலது பக்கம் உள்ள ஓட்டு கட்டிடம் தான் வாதியின் வீடு என்றால் வாதியின் வீடாகும்.

3. மேற்சொன்ன வாதியின் வீட்டின் முன்பக்கம் கேட் உண்டு என்றால் சரிதான். மேற்சொன்ன புகைப்படத்தின் வலது முன்பக்கம் மின்கம்பம் காணப்படுகிறது என்றால் சரிதான். மின்கம்பத்தை தொட்டு பின்னால் ஒரு நீண்ட காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றாலும், அது அகிமாஸிற்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். என் வீட்டின் முன்பு போடப்பட்டுள்ள கருங்கற்கள் புகைப்படத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். அந்த கருங்கற்கள் நான் காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்காக என்னால் போடப்பட்டது என்றால் சரிதான்.

4. நான் காம்பவுண்ட் சுவர் கட்டும் போது தான் பிரச்சனை எதுவும் ஏற்பட்டது என்றால் பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை, காவலர்கள் வந்து புகார் அளித்துள்ளார்கள் என்றும் மற்றும் வழக்கை சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில்

உள்ளதால் காம்பவுண்ட் சுவர் அமைக்கக் கூடாது என்று அறிவுறுத்தினார்கள். கருங்கற்கள் குவியலுக்கு முன்னால் திற்பரப்பு பேரூராட்சியில் இருந்து கட்டப்பட்ட கழிவுநீர் ஓடை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கருங்கற்களுக்கு குவியலுக்கு முன்னால் உள்ள ஓடையில் ஒரு காங்கீரிட் சிலாப் போடப்பட்டுள்ளது என்றால் காங்கீரிட் சிலாப்பும், மரத்தால் போடப்பட்ட மரப்பலகையும் வீடு அமைக்கும் போது போடப்பட்டது.

5. நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு மேற்சொன்ன காங்கீரிட் சிலாப்பின் நீளம் 1 மீ, அகலம் 2 மீ என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன கழிவுநீர் ஓடையில் அகிமாஸ் என்பவரின் காம்பவுண்ட் சுவரை ஒட்டி கிழக்கு மேற்காக B பட்டிகை சொத்தின் முன்பு காங்கீரிட் சிலாப்பு அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், நடந்து செல்வதற்காக போடப்பட்டுள்ளது. மேற்சொன்ன காங்கீரிட் சிலாப்பு நாங்கள் நடந்து செல்வதற்காக அமைக்கப்படவில்லை என்றாலும், வாதி இருசக்கர வாகனமும், நான்கு சக்கர வாகனமும் கொண்டு செல்வதற்காக வாதியால் அமைக்கப்பட்ட காங்கீரிட் சிலாப்பு என்றால் சரியல்ல, நாங்கள் அமைத்த காங்கீரிட் சிலாப்பாகும்.

6. நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு மேற்சொன்ன காங்கீரிட் சிலாப்பானது 3 மீ அகலமும், 1 மீ நீளமும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட வரும் நான் உடன் இருந்தேன் என்றால் சரிதான். நான் வழக்கிற்காக நீதிமன்ற ஆணையர் அறிக்கையை பற்றி தெரியாது என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).